# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**17 வயதுப்பிரிவு**
(01.01.2001 – 31.12.2002 வரையில் பிறந்தோர்)

# இளைய தலைமுறையின் வரலாற்றுக்கடமை

எந்தவொரு மகத்தான இலட்சியத்தையும் பின்னிருந்து இயக்குவது நீதியின் அழைப்புத்தான். நீதிதான் நாகரிகமடைந்த சமூகம் ஒவ்வொன்றினதும் இறுதி இலக்காகும். நீதி என்பது சத்தியத்தின் இயக்கமேயன்றி வேறில்லை. வையகத்தில் எல்லா மனிதர்களும் பிறப்பில் சமம் என்பதும் எல்லா மனிதர்களுக்கும் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், மகிழ்ச்சித் தேடலுக்கான உரிமை உண்டு என்பதும் நீதி. அத்தகைய நீதிக்கு மதிப்பு உண்டெனில் அதற்காகப் போராடுபவர்களுக்கும் பெரும் மதிப்பு உண்டு என்பதே உண்மை.

ஈழத் தமிழர்கள் வரலாற்றில் மிகவும் நெருக்கடியான காலகட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். சிங்கள அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எம் தமிழினத்தைப் பாதுகாத்து, எமது சுதந்திர தேசத்தின் விடுதலைக்காக உலகளவில் பரந்துபட்ட அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு எம்முடையதாகிறது. இதையுணர்ந்து நாம் எம் மத்தியிலுள்ள வேற்றுமைகள், வெறுப்புகளைக் களைந்து எமக்கான நீதிக்காகவும், எம்மினத்தின் விடிவுக்காகவும் ஒன்றிணைந்து போராட வேண்டிய காலமிது.

சிங்கள ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் எல்லோரும் தமிழர் விடயத்தில் ஒரே இலக்கில் உள்ளவர்களே! அவர்கள் அந்த இலக்கை அடைய பயன்படுத்தும் வழிமுறைகளிலேயே வேறுபடுகிறார்கள். 'நல்லாட்சி' என்று உலகிற்கு காட்டிக்கொண்டு இன்னமும் எமது மக்களை தன் இராணுவக் கண்காணிப்பினுள்ளும் பயப்பிராந்திக்குள்ளும் வைத்திருக்கிறது சிறிலங்கா அரச இராணுவ இயந்திரம். இணக்க அரசியல் செய்யும் அரசு அல்ல இது. இணங்கியதாகக் காட்டி, பின் இடர் விளைவிக்கும் அரசு என்பதே தமிழர்கள் பட்டறிந்த உண்மை.

எமது தூய்மையான போராட்டத்தின் நியாயங்களை முழு உலகுக்கும் சரியான முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

தமிழ் மக்கள் நடத்திய வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டமானது, தமது இனத்தின் மீதான ஒடுக்குமுறைக்கும், இன அழிப்புக்கும் எதிரானதொரு போராட்டமே ஒழியப் பயங்கரவாத நடவடிக்கையன்று என்பதையும் உலக மக்கள் அனைவருக்கும் நாம் தெளிவுபடுத்தவும், தமிழரின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பனவற்றின் அடிப்படையில் இலங்கைத்தீவிற்குள் தனி நாட்டை அமைப்பதற்கான சுதந்திரமான வெகுசன வாக்கெடுப்பை தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தமிழர்களிடத்திலும் பன்னாட்டு சபையின் கண்காணிப்பில் நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் எனவும் பன்னாடுகளின் அரசியல் களத்தில் நின்று நாம் போராட வேண்டிய காலமிது.

தமிழீழ விடுதலையை நோக்கிய பயணத்தில் நாம் எமது முழு ஆற்றலையும் திரட்டி பலம்பெற வேண்டிய காலமிது. உணர்வு குன்றாமல் உறுதி தளராமல் 'தனித்தமிழீழம்' ஒன்றே தமிழீழ மக்களின் ஒரே குறிக்கோள் என உரத்து முழங்க வேண்டிய காலமிது. நாம் ஊமையாக உள்ளவரை இந்த உலகம் செவிடாகத்தான் இருக்கப் போகிறது. யாரும் எமக்கு தாம்பாளத்தில் தீர்வைத் தரப்போவதில்லை, அக புற நெருக்கடிகளே எமக்கான தீர்வைப் பெற்றுத்தரும்.

'தக்கன பிழைக்கும் தகாதன அழியும்' என நியாயம், நீதி, உணர்வுகள், ஒழுக்கம், விழுமியங்கள் எவை பற்றியும் அதிகம் அலட்டிக் கொள்ளாதது இயற்கையின் நியதி. ஆம், வலியது வாழும், வெற்றி பெற்றவன் அனைத்தையும் எடுத்துக் கொள்வான், வரலாறு உட்பட.

எமது போராட்டம் நியாயமானதாகவோ அல்லது சத்தியத்தின் வழி நிற்பதனாலோ இந்த வையகம் எமக்குச் சார்பாக நிற்கப்போவதில்லை. நாம் வலுப் பொருந்தியவர்களாகவும் தகுதியுள்ளவர்களாகவும் எம்மை மாற்றிக் கொள்வதனாலேயே இந்த உலகம் எமக்கான நீதியைப் பேசும். அதற்கு ஏற்றவகையில் உலகத் தமிழ் இளையோர்கள் ஒரு வலு நிறைந்த அமைப்பாகச் செயற்பட்டு, ஒரு உயரிய நோக்கத்துடன் தாம் வாழும் நாடுகளில் கிடைக்கக்கூடிய அறிவியல், பொருளாதார வளங்களைப் பயன்படுத்தி தம்மைப் பலப்படுத்தி எம்மினத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும்.

" நேற்றைய வரலாறு தெரியாது போனால் இன்று நடப்பது புரியாமல் போகும். இன்று நடப்பது புரியாமல் போனால் நாளை என்பது எம்மிடம் இல்லை" என்பதை உணர்ந்து, வரலாறுகளை அறிந்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் இளம் சமுதாயம் இனப்பற்றுடனும் ஆரோக்கியமான சிந்தனைகளுடனும் பல துறைகளிலும் கற்றுத் தேர்ந்து, சிறந்த வல்லுநர்களாக வரவேண்டும். அத்தகைய இளம் சமுதாயம், தான் வளர்ந்து வரும் நிலையிலேயே தமது எதிர்கால தலைமுறைக்கும் சிறந்த வழிகாட்டிகளாக வளர வேண்டியது அவசியமானது.

என்மொழி, என்னினம், என்நாடு நலிகையில்

எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் – வேறு

எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன்! – வரும்

புன்மொழி, பழியுரை, துன்பங்கள் யாவையும்

பொருட்டென மதித்துளம் கொள்ள மாட்டேன்! – இந்த

பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்!

மீண்டெழும் காலம் மறுபடியும் உருவாகும். மாண்டவர் கனவும் பலிக்கும். சிங்கள தேசத்தின் வெற்றிக் கொண்டாட்டமும், சிங்களத்தின் தமிழின அழிப்பும் முன்னரை விடவும் பலமான எதிர்வினைகளை உருவாக்கியே தீரும். அந்த எதிர்வினை, ஈழத் தமிழர்களை மட்டுமல்ல, வையகத்தில் வாழும் எல்லாத் தமிழர்களையும் ஒன்றிணைக்கும்.

நன்றி,
வணக்கம்.